**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 164/2011**
**Deposition of witness for prosecution –PW–12**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முனியசாமி |
| Father Name | : | திரு.மாணிக்கம் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 26th day of July 2023.

(**3 வது எதிரி ஆஜர். 1 மற்றும் 2 வது எதிரிகள் இறந்துவிட்டார்கள்.**)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கிராம நிர்வாக அலுவலராக இருந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2011ம் வருடம் மார்ச் மாதம் நான் திருப்புல்லாணி கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பணியில் எங்களது அலுவலகத்தில் இருந்தபோது திருப்புல்லாணி காவல் ஆய்வாளர் என்னை போனில் அழைத்தார். காவல் நிலையத்தில் வைத்து ஒரு நபரிடம் விசாரணை செய்தார்கள். அவர் யாரென்று எனக்கு தெரியாது. அந்த எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதன்பிறகு ஏதோ நகையை கைப்பற்றி வைத்திருந்ததை காண்பித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். (ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.10 ஆகவும், அத்தாட்சியில் 1வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியத்தின் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 ன் படி அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பில் கு.வி</u>**

கடந்த 30.03.2011ம் தேதி எதிரி முகம்மது அல்தாப் என்பவரை கீழக்கரை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. என் முன்பாக எதிரி நச்சுஊரணி எதிரே உள்ள முள்வேலிக்குள் மறைத்து வைத்திருந்த நகைகளை எடுத்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அதனை கைப்பற்றிய போலிசார் அத்தாட்சி மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. என் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததற்கும், அத்தாட்சி பதிவு செய்ததற்கும் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

(ஒப்பம்/— R.பாண்டி மகாராஜா)
நீதித்துறை நடுவர் எண்.1, (FAC)
இராமநாதபுரம்.